# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

**இல. 8,561 — 1939 ம் ஹு மார்கழிமீ 22 ந் திகதி, வெள்ளிக்கிழமை.**


## Part IV.—நான்காம் பாகம்.

### அசாட்சியாரின் விளம்பம்

M. L. A.—B 1730/L. D.—B 171/39.

**ஆடுமாடுகள் கொல்லுபவருக்கான சட்டம்.**

ஆடுமாடுகளைக் கொல்பவருக்கான சட்டத்தின் (201 ம் அத்தியாயத்தின்) 22 ம் பிரிவின்படி தகுந்த அதிகாரமுடைத்தான நுவரெலிய பட்டன ஊர்ப்பிரிவுச் சபையாரால் செய்யப்பட்டும் மேற்கூறப்பட்ட பிரிவால் தேசாதிபதியவர்கள் மீது வைக்கப்பட்ட அதிகாரப் பெலப்பின்படி அவர்களால் உறுதிப்படுத்தவும்பட்டது.

எஸ். டபிள்யு, ஆர். டீ. பண்டாரநாயக்க,
ஸ்தல ஸ்தாபன மந்திரி.

கொழும்பு, 1939 ம் ஹு டிசெம்பமீ 19 ந் உ.

ஒழுக்கவிதிகள்.

1. ஆடுமாடுகள் கொல்பவருக்கான சட்டத்தின் 21 ம் பிரிவின்கீழ் பிரசித்தம் செய்யப்பட்ட பிரசித்த ஆடுமாடுகள் கொல்லும் கொட்டில், நுவரெலிய சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட எந்தச் சுகாதார உதவியாளரின் பொறுப்பில் இருக்கும். அப்படிப்பட்ட ஆடுமாடுகள் கொல்லும் கொட்டிலின் ஒழுங்குக்கும் சுகாதார நிலைமைக்கும் அப்படிப்புட்ட உத்தியோகத்தரே பொறுப்பாளராவர்.

2. (1) கொட்டில் எவரும் எந்த மிருகத்தையும்—

(*a*) அப்படிப்பட்ட மிருகம், நுவரெலிய சுகாதார வைத்திய உத்தியோகத்தரால் அல்லது அதற்கென சபையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பரிசோதனை செய்யப்பட்டு மனுஷ உணவுக்காக கொல்லத் தகுதியுடையதென அப்படிப்பட்ட உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி ; அல்லது

(*b*) காலை 9 மணிக்கும், மத்தியானம் 12 மணிக்கும் இடையிலுள்ள நேரத்தைத் தவிர எந்த நாளிலும் கொல்லப்படாது. ஆயினும் இதன்கீழ் குறிக்கப்பட்டுள்ளதைவிட அக்கிராசனர் எந்த மிருகத்தையும் எந்த நேரத்திலும் கொல்ல விசேஷ சந்தர்ப்பங்களில் அதிகாரம் கொடுக்கலாம்.

(2) கொட்டிலில் எவரும் எந்த மிருகத்தையும்—

(*a*) (1) ம் பந்தியின்கீழ் அம்மிருகத்தைக் கொல்ல அனுமதி கொடுத்த நேரம் தொடங்கி 30 மணித்தியால காலவெல்லை முடிந்த எந்த நேரத்திலும் ; அல்லது

(*b*) (1) ம் பந்தியின்கீழ் அனுமதி கொடுக்கப்பட்டபின் ஆடுமாடுகளைக் கொல்லும் கொட்டிலின் சுற்றுப்புறத்திலிருந்து அது உயிருடன் கொண்டுபோகப்பட்டிருப்பின் திரும்பவும் அது பரிசோதனை செய்யப்பட்டும் அப்பந்தியின்கீழ் மனுஷ உணவுக்காகக் கொல்லத் தகுதியுடையதென கொடுக்கப்பட்டுமிராவிடில் கொல்லப்படாது.

3. ஆடுமாடுகளைக் கொல்லும் கொட்டில் வளவுக்குள் எந்த மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொரு ஆளும் அம்மிருகம் அதற்குள் இருக்கும் வரையும் போதியளவு தீன் கொடுக்கப்பட்டும் தண்ணீர் வைக்கப்பட்டுமிருக்கத் தேவையாகும் சகல வழிவகைகளையும் தேட வேண்டும்.

4. ஆடுமாடுகள் கொல்லும் கொட்டில் வளவுக்குள் எந்த மிருகத்தைக் கொண்டுவரும் ஒவ்வோர் ஆளும், கொல்வதற்குத் தகுதியற்றதென அம்மிருகம் விலக்கப்பட்டால், அப்படி விலக்கப்பட்ட பின் உடனே மிருகத்தை வெளியே கொண்டுசெல்ல வேண்டும் ; அல்லது அதை வளவிலிருந்து கொண்டுபோகச் செய்தல் வேண்டும்.

5. எந்த மிருகமும் 2 ம் ஒழுக்கவிதியின் கீழ் அனுமதிக்கப்பட்டபின் அது நோயுள்ளதாக அல்லது மனுஷ உணவுக்காகக் கொல்லத் தகுதியற்றதாக விருப்பின் 2 ம் ஒழுக்க விதியில் குறிக்கப்பட்ட எந்த உத்தியோகத்தரும் அம்மிருகம் கொல்லப்படுவதைக் தடுக்கலாம்.

6. ஆடுமாடுகள் கொல்லப்படும் கொட்டிலில் கொல்லப்பட்ட எந்த மிருகத்தின் உடற்கூறு அல்லது கழிவுமாமிசம் 2 ம் ஒழுக்கவிதியில் குறிக்கப்பட்ட எந்த உத்தியோகத்தரின் அபிப்பிராயத்தில் மனுஷ உணவுக்கு தகுதியற்றதாய் அல்லது நோயுள்ளதாய் இருக்கில் அவர் அவ்வுடற்கூறை அல்லது கழிவு மாமிசத்தை உடனே அழித்துவிடச் செய்ய அல்லது அப்படிப்பட்ட உடற்கூறை அல்லது கழிவுமாமிசத்தை விற்பனவுக்காக வெளியில் தூக்கி வைத்தலை அல்லது மனுஷ உணவுக்காகப் பாவிக்கப்படுதலை தடுப்பதற்கான ஒழுங்குபண்ணுவர்.

7. மனுஷ உணவுக்காகத் தகுதியுள்ளதென அல்லது 5 ம் ஒழுக்க விதியின்படி ஏற்பாடு அனுமதிக்கப்படாத அல்லது 5 ம் ஒழுக்கவிதியில் ஏற்பாடுசெய்தபடி அதைக் கொல்லப்படுதல் தடைசெய்யப்பட்ட எந்த மிருகத்தையும் ஆடுமாடுகள் கொல்லப்படும் கொட்டிலுக்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகத்தர் கொல்ல உத்தரவு கொடார்.

8. (1) 6 ம் ஒழுக்கவிதியின்கீழ் மனுஷ உணவுக்குத் தகுதியற்றிருப்பதாகக் கூறப்பட்ட எந்த மாமிசத்தையும் அல்லது கழிவு மாமிசத்தையும் 2 ம் ஒழுக்க விதியில் குறிக்கப்பட்ட எந்த உத்தியோகத்தரினதும் கட்டளைப்படியன்றி ஆடுமாடுகளைக் கொல்லும் கொட்டிலிலிருந்து எந்த ஆளும் கொண்டுபோகப்படாது.

(2) ஆடுமாடுகள் கொல்லும் கொட்டிலிலிருந்து எந்த ஆளும் மனுஷ உணவுக்காக உத்தேசிக்கப்பட்ட எந்த மிருகத்தின் உடல் கூறையும் அவ்வித உடல் கூறு முன் சீப்புப் பக்கத்திலும் பின்சீப்புப் பக்கத்திலும் " யூ. டீ. சீ " (U. D. C.) நுவரெலிய (" Nuwara Eliya ") எந்த அடையாளத்திலும் " ஒஸ்திரேலியன் மாமிசம் " (Australian Beef) " நாட்டு மாட்டின் மாமிசம் " (Country Beef) " அல்லது " ஆட்டிறைச்சி. (Mutton) என்ற எழுத்துக்களாலும் காரியத்துக்கேற்ப அப்படிப்பட்ட உடல்கூறு கொட்டிலின் பொறுப்பு உத்தியோகத்தரால்) முத்திரையிடப்பட்டாலொழிய எவரும் ஆடுமாடுகல் கொல்லும் கொட்டிலிலிருந்து வெளியே கொண்டுபோகப்படாது.



8610

9. எந்த மிருகமும் இன்னெரு எந்த மிருகத்தின் முக்தாவில் அல்லது கொட்டில் சுற்றுப்புறத்தில் முன் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் உறுப்புகள் கொண்டுபோகப்படுமட்டும் அல்லது திரையிட்டு மறைக்கப்பட்டும் அச்சுற்றுப்புறம் துப்புரவாக்கப்படுமட்டும் கொல்லப்படாது.

10. (1) மிருகங்களைக் கொல்லும் கொட்டிலைப் பாவிப்பதற்காக ஒரு சலார் பின்வரும் வீதப்படி சபைக்கு முற்பணமாகக் கட்டப்பட்டும் சலார் கட்டியதற்குச் சான்றாக உத்தியோக முறையான ஒரு பற்றுச் சீட்டு மிருந்தாலொழிய எந்த மிருகமும் கொல்லப்பட அனுமதிகொடுக்கப்படமாட்டாது.

மாடுகளுக்கு தலைக்கு 75 சதம்.

செம்மறியாடுகள் வெள்ளாடுகளுக்கு தலைக்கு 25 சதம்.

இச்சலார்கள் வீதங்கள் பொறுப்பான இடத்தில் 24 மணித்தியாலங்களுக்குத் திறந்துவைப்பதையும் சேர்க்கும்.

கொல்லப்படத் தகுதியற்றதெனத் தள்ளப்பட்ட அல்லது கொல்லப்படத் தகுதியுள்ளதென அனுமதி கொடுக்கப்பட்டபின் ஆடுமாடுகள் கொல்பவர் கேள்விப்படி கொல்பவரால் மீள்விக்கப்பட்ட ஒவ்வொரு மாட்டுக்காக அல்லது ஒவ்வொரு செம்மறியாட்டுக்காக, வெள்ளாட்டுக்காக 24 மணித்தியாளங்களுக்கு மேற்படாத எக்காலத்துக்குமாக 12 சதவீதமாக ஒரு சலார் கொடுக்கப்படவேண்டும்.

(2) 2 ம் ஒழுக்கவிதியின்படி மனுஷ உணவுக்காகக் கொல்லத் தகுதியுள்ளதென ஓர் மிருகம் அனுமதிக்கப்பட்டிருக்கில், அம்மிருகத்தை ஆடுமாட்டுத் தொழுவத்துள் ஏற்றுக்கொள்ளுமுன் உத்தியோக முறையான சலார் கட்டப்பட்டதெனச் சான்று காட்டும் பற்றுச் சீட்டுத் தேவைப்படாது.

11. ஆடுமாட்டுத் தொழுவக்காரன் பின்காட்டியுள்ள மாதிரித் தாளில் மிருகங்களைக் கொல்லும் கொட்டிலிலிருந்து கொண்டுசெல்லும் எல்லா ஆடுமாடுகளைப்பற்றியும் ஒரு பதிவுப் புத்தகம் வைத்திருக்க வேண்டும் :—

| ஆடு மாட்டின் சாதனப் பத்திரத்தின் (வவுச்சரின்) இல. | விபரம் | நிறம் | வயசு | சுட்டுள்ள குறிகள் | | ஆடுகள் கொல்பவரின் பெயர் | ஆடு மாடுத் தொழுவத்துள் விடப்பட்ட தேதியும் நேரமும் | பரிசோதனை பண்ணின தேதி | கொல்லப்பட்ட தேதி | ஆடு மாடுகளை எதிரும் உத்தியோகஸ்தரின் முதலெழுத்தொப்பம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வலது பக்கத்தில் | இடது பக்கத்தில் | | | | | | |
| | | | | | | | | | | | |

ஆடுமாடுகள் கொல்பவருக்கான சட்டத்தின் 23 ம் பிரிவின்கீழ் (தற்போது 22 ம் பிரிவு) நுவரெலிய அபிவிருத்தி ஆலோசனைச் சங்கத்தால் செய்யப்பட்டும் உள்நாட்டு அரசாங்கச் சட்டத்தின் 246 ம் பிரிவின் ஏற்பாடுகளின் தகுதியால் பெலப்புடைமை கொண்டு தொடர்ச்சியாயிருந்த பின்வரும் பிரமாணங்கள் இத்தால் அழிக்கப்படுகின்றன :—

1897 ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 5 ந் திகதியைக் கொண்ட 5,509 ம் இலக்க கெசெற் பத்திரிகையில் பிரசுரம்பண்ணப்பட்ட பிரமாணங்கள்.

1909 ம் ஆண்டு ஆகஸ்ட் (ஆவணி) மாதம் 13 ந் திகதியைக்கொண்ட 6,323 ம் இலக்க கெசெற் பத்திரிகையில் பிரசுரம்பண்ணப்பட்ட பிரமாணங்கள்.

1916 ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 13 ந் திகதியைக்கொண்ட 6,829 ம் இலக்க கெசெற் பத்திரிகையில் பிரசுரம்பண்ணப்பட்ட பிரமாணங்கள்.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

*சீதுவவில் டன்டுகன் ஓயவின் மேல் ஓர் பாலம் கட்டுதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—*

*பிரதம்படத்து இல. A 925. குறிச்சி—சீதுவவும் றட்டொழுவவும்.*

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மில்லகஹவத்த, இறைவரி இலக்கம் 197 ன் பகுதி | தென்னங்காணி, 30 வருஷஞ்சென்ற 3 தென்னையும், 10 வருஷஞ்சென்ற 10 கமுகுமுள்ளது | செல்லப்புலிகே ஹெலனு ஹேசா விஜயவர்தன, சீதுவ .. | 0 0 1·30 |
| 3 | மில்லகஹவத்த, இறைவரி இலக்கம் 198 ன் பகுதி | தென்னங்காணி, 30 வருஷஞ்சென்ற 6 தென்னையும், 3 வருஷம் துவங்கி 10 வருஷம் வரை சென்ற 3 தென்னையும், 2 கமுகுவுமுள்ளது | போத்தலகே மேறி பேர்னுந்து விக்கிரமசிங்க, சீதுவ .. | 0 0 4·97 |
| 5 | பம்புறுகஹவத்த, இறைவரி இலக்கம் 205 ன் பகுதி | தென்னங்காணி, 8 வருஷஞ்சென்ற 3 கமுகுவுள்ளது | ௸ .. .. .. | 0 0 0·17 |
| 6 | பம்புறுகஹவத்த, இறைவரி இலக்கம் 204 ன் பகுதி | தென்னங்காணி, 25 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 8 வருஷஞ்சென்ற 2 கமுகுவும், 1 டோம்ப மரமுமுள்ளது | கலுஅப்பு கங்கணமலாயே டொன் பீற்றர் கறுணரத்தின, லியனகேமுல்ல, சீதுவ | 0 0 0·21 |
| 7 | பம்புறுகஹவத்த, இறைவரி இலக்கம் 203 ன் பகுதி | தென்னங்காணி, 8 வருஷஞ்சென்ற 2 கமுகுவுள்ளது | கலுஅப்பு கங்கணமலாயே டொன் கொறுனிஸ், லியனகேமுல்ல, சீதுவ | 0 0 0·03 |
| 8 | ௸ .. | தென்னங்காணி, 40 வருஷஞ்சென்ற 1 தென்னையுள்ளது | ௸ .. .. .. | 0 0 0·17 |
| 9 | பம்புறுகஹவத்த, இறைவரி இலக்கம் 200 ன் பகுதி | தென்னங்காணி, 40 வருஷஞ்சென்ற 1 தென்னையும் 2 கால்மரமுமுள்ளது | கௌவிலகே சிறில் இஸ்ரீபின் டீ. சில்வா குமாறனத்துங்க, சீதுவ .. | 0 0 2·55 |
| 11 | யக்டேஹிகும்புற .. | நெல்வயல் .. .. | பத்தகே யேனிஸ் பேர்னுந்து, பத்தகே யூவான் பேர்னுந்து, சீதுவ .. | 0 0 24·73 |
| 14 | முத்தெட்டுவேகும்புற .. | நெல்வயல் .. | ஜீக்கியனகே நந்திறிஸ் பேர்னுந்து குணத்திலக்க, மேற்படி பஸ்தியான் பேர்னுந்து, மேற்படி சாளிஸ் பேர்னுந்து, மேற்படி எபிரகாம் பேர்னுந்து, மேற்படி ஜேம்ஸ் பேர்னுந்து, மேற்படி தெப்பானிஸ் பொர்னுந்து, மேற்படி சாலோ நோனு பொர்னுந்து, மேற்படி மேக்கல் பொர்னுந்து, கிறிகெற்றியே அபிலீனுபெரேரு, மேற்படி சவியல் பெரேரு, மேற்படி பஸ்தியான் பெரேரு, மேற்படி மேற்படி செலஸ்ரீனு பெரேரு, மேற்படி அந்தோனி பெரேரு, மேற்படி சிறில் பெரேரு, மேற்படி ஜேம்ஸ் பெரேரு, மேற்படி யுசேபியாஸ் பெரேரு, மேற்படி ஜோர்ஜ் பெரேரு, மேற்படி பிருன்சிஸ்கு பெரேரு, மேற்படி அப்பொன்ச் பொர்னுந்து, மேற்படி தேமிஸ் பொர்னுந்து, பற்றகே தெக்காஸ் பெரேரு, மேற்படி திமோதியாஸ் பெரேரு, மேற்படி சார்ளிஸ் பெரேரு, மேற்படி பிருன்சிஸ்கு பெரேரு, மேற்படி அல்பிறெட் பெரேரு, மேற்படி எட்வேட் பெரேரு, மேற்படி றிச்சேட் பெரேரு, மேற்படி மாட்டின் பெரேரு, மேற்படி சைமன் பெரேரு, மேற்படி எட்வின் பீற்றர் பெரேரு, மேற்படி ஆர்தர் பெரேரு, மேற்படி சொலமன் பெரேரு, கச்சகடுகே அமாறிஸ் பீறிஸ், மேற்படி ஹரமானிஸ் பொர்னுந்து, வெற்றிகே சோபியா பொர்னுந்து, இறிப்பிற்றிகே வின்சென்ற் ஹேயல், இறிப்பிற்றிகே கெலனு ஹேயல், மனமாலகே கறோலிஸ் பொர்னுந்து எல்லோரும் றட்டொழுவ, சீதுவ | 0 1 3·47 |

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 15 | தல்கஹவத்த .. | தென்னங்காணி, 40 வருஷஞ்சென்ற 5 தென்னையுள்ளது | ஜீக்கியனகே நந்திறிஸ் பொ்னுந்து குணத்திலக்க, றட்டொழுவ, சீதுவ | 0 0 3·04 |
| 16 | ஷெ .. | தென்னங்காணி, 50 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 4 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 25 வருஷஞ்சென்ற 1 பலாவும் ஒரு மண்காணின் பகுதியுமுள்ளது | கச்சக்கடுவகே கிறிஸ்தோகு பொ்னுந்து, றட்டொழுவ, சீதுவ .. | 0 0 1·01 |
| 17 | ஷெ .. | தென்னங்காணி, 5 வருஷந்துவங்கி 6 வருஷம் வரைசென்ற 2 தென்னையும், 10 வருஷஞ்சென்ற 3 கமுகுவும் ஒரு கட்டடச் சுவருமுள்ளது | ஷெ .. .. .. | 0 0 2·61 |
| 18 | ஷெ .. | தென்னங்காணி, 10 வருஷஞ்சென்ற 1 கமுகுவும் ஒரு உய்வேலியின் பகுதியுமுள்ளது | ஜீக்கியனகே நந்திறிஸ் பொ்னுந்து குணத்திலக்க, றட்டொழுவ, சீதுவ | 0 0 2·19 |
| 19 | கிறிப்பெல்லகஹவத்த .. | தென்னங் காணியின் பகுதி (செய்கை இல்லை) ஒரு பாதையின்பகுதியுள்ளது | ஜீக்கியனகே நந்திறிஸ் பொ்னுந்து குணத்திலக்க, மேற்படி பஸ்தியானு பொ்னுந்து, மேற்படி சார்லிஸ் பொ்னுந்து, மேற்படி ஏபிரகாம் பொ்னுந்து, மேற்படி ஜேம்ஸ் பொ்னுந்து, மேற்படி தெப்பானிஸ் பொ்னுந்து, மேற்படி சலோ நோனு பொ்னுந்து, மேற்படி மைக்கல் பொ்னுந்து, கிறிகெற்றிகே அபிலீனு பெரேரு, மேற்படி சாவியல் பெரேரு, மேற்படி பஸ்தியான் பெரேரு, மேற்படி அந்தோனி பெரேரு, மேற்படி சிறில் பெரேரு, மேற்படி ஜேம்ஸ் பெரேரு, மேற்படி உசேபியாஸ் பெரேறு, மேற்படி ஜோர்ஜ் பெரேரு, மேற்படி பிருன்சிஸ்கு பெரேரு, மேற்படி செலஸ்ரீனு பெரேரு, மேற்படி அப்பொன்சு பொ்னுந்து, மேற்படி தேமிஸ் பொ்னுந்து, பற்றகே தெக்காஸ் பெரேரு, மேற்படி திமோதியாஸ் பெரேரு, மேற்படி சாளிஸ் பெரேரு, மேற்படி பிருன்சிஸ்கு பெரேரு, மேற்படி அல்பிறெட் பெரேரு, மேற்படி எட்வேட் பெரேரு, மேற்படி றிச்சேட் பெரேரு, மேற்படி மாட்டின் பெரேரு, மேற்படி சைமன் பீற்றர் பெரேரு, மேற்படி எட்வின் பீற்றர்பெரேரு, மேற்படி ஆதர் பெரேரு, மேற்படி சொலமன் பெரேரு, கச்சக்கடுகே அமாறிஸ் பீறிஸ், மேற்படி ஹர்மானிஸ் பொ்னுந்து, வெற்றிக்கே சோபியா பொ்னுந்து, கிறிபிற்றிக்கே வின்சென்ற் றேயல், கிறிப்பிற்றிகே கெலனு றேயல், மனமலகே கரோலிஸ் பொ்னுந்து எல்லோரும் றட்டொழுவ, சீதுவ | 0 0 6·21 |
| 20 | கொறக்கஹவத்த .. | தென்னங் காணியின் பகுதி (செய்கையில்லை) | கச்சக்கடுவே மேறியா பொ்னுந்து, றட்டொழுவ, சீதுவ .. | 0 0 1·03 |
| 21 | கொஸ்கஹவத்த .. | தென்னங்காணி, 2 வருஷஞ்சென்ற 2 தென்னையும், 5 வருஷஞ்சென்ற 2 கமுகுவும் 2 பருத்திமரமுமுள்ளது | கச்சக்கடுவே ஹர்மானிஸ் பொ்னுந்து, றட்டொழுவ, சீதுவ .. | 0 0 3·94 |
| 24 | முத்தெட்டுவகும்புற .. | நெல்வயல் .. | ஜீக்கியனகே நந்திறிஸ் பொ்னுந்து குணத்திலக்க, மேற்படி பஸ்தியான் பொ்னுந்து, மேற்படி சாளிஸ் பொ்னுந்து, மேற்படி ஏபிரகாம் பொ்னுந்து, மேற்படி ஜேம்ஸ் பொ்னுந்து, மேற்படி தெப்பானிஸ் பொ்னுந்து, மேற்படி சாலோ நோனு பொ்னுந்து, மேற்படி மைக்கல் பொ்னுந்து, கிறிகெற்றிகே அபிலீனு பெரேரு, மேற்படி சவியல் பெரேரு, மேற்படி செலஸ்தீனு பெரேரு, மேற்படி பஸ்தியான் பெரேரு, மேற்படி அந்தோனி பெரேரு, மேற்படி சிறில் பெரேரு, மேற்படி ஜேம்ஸ் பெரேரு, மேற்படி உசேபியாஸ் பெரேரு, மேற்படி ஜோர்ஜ் பெரேரு, மேற்படி பிருன்சிஸ்கு பெரேரு, மேற்படி அப்பொன்சு பொ்னுந்து, மேற்படி தேமிஸ் பொ்னுந்து, பத்தகே தெக்காஸ் பெரேரு, மேற்படி திமோதியாஸ் பெரேரு, மேற்படி சாளிஸ் பெரேரு, மேற்படி பிருன்சிஸ்கு பேறெரு, மேற்படி அல்பிறெட் பெரேரு, மேற்படி எட்வேட் பெரேரு, மேற்படி றிச்சேட் பெரேரு, மேற்படி மாட்டின் பெரேரு, மேற்படி சைமன் பீற்றர் பெரேரு, மேற்படி எட்வின் பீட்டர் பெரேரு, மேற்படி ஆர்தர் பெரேரு, மேற்படி சொலமன் பெரேரு, கச்சக்கடுகே அமாறிஸ் பீறிஸ், மேற்படி ஹரமானிஸ் பொ்னுந்து, வெற்றிகே சோபியா பொ்னுந்து, கிறிபிற்றிகே வின்சென்ற் றேயல், மேற்படி கெலனு றேயல் மனமாலகே கரோலிஸ் பொ்னுந்து, றட்டொழுவ, சீதுவ | 0 0 32·13 |
| 26 | பம்புறுகஹகொடெல்லகும்புற | நெல்வயல் .. | கச்சக்கடுவகே மறியானு பொ்னுந்து றட்டொழுவ, சீதுவ .. | 0 0 6·97 |
| 27 | பம்புறகஹகொடெல்ல .. | தென்னங்காணி, 8 வருஷஞ்சென்ற 2 தென்னையும் ஒரு கட்டடஅஸ்திவாரத்தின்பகுதியுமுள்ளது | ஷெ .. .. .. | 0 0 4·27 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஞூ (ஜனவரி) தை மாதம் 30 ந் தேதியிலன்று காலை 8 மணிக்கு ஐயல வாடி வீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1939 ம் ஞூ (டிசெம்பர்) மார்கழிமீ 18 ந் வ.

டபிள்யு. ஒ. ஸ்டீவன்,
அரசாட்சி ஏசன்டு, மேல் மாகாணம்.

தெல்தெனியாப் பள்ளிக்கூடம் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 605. குறிச்சி—தெல்தெனியா சுகாதார எல்லேக்குள்உள்ள வேவகம (பகுதி).

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மெத்திவலத்தென்னவனத்த அல்லது மெத்திவல கும்புறேவனத்த, வரிஇலக்கம் 280 ம், 281 ம் | பலா, கமுகு மரங்களடங்கிய தென்னந்தோட்டம் | மிஸ். ஏ. சீ. கலுவாஞ, அத்னகல குனேபனே | 0 2 24·7 |

எடுத்துக்கொள்வதற்கான வத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டததினது 5 ம் பிரிவின் (203 ம் அதிகாரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சஞதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஹூ (ஜனவரி) தை மாதம் 29 ந் தேதியிலன்று காலே 8.30 மணிக்கு தெல்தெனியா றெஸ்றவுசில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவவுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1939 ம் ஹூ (டிசெம்பர்) மார்கழிமீ 16 ந் உ.

பீ. எம். ரெனிசன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

கண்டி ஆசுப்பத்திரி திருப்பிக்கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :

பிரதமபடத்து இல : A 535. குறிச்சி—தெய்யனேவல (பகுதி).

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கட்டுபுல்லேகெவத்தை அல்லது கொஸ்வத்தை, வரி இலக்கம் 90 (பகுதி) 1 உவாட் இல. 4 | பலா, தென்னை, கித்துல் முதலிய மரங்களடங்கிய தோட்டம் | மிஸ். எச். ஜீ கெல்லர், ஆசுப் பத்திரி ரோட், கண்டி | 0 1 37·4 |
| 8 | கப்புகஸ்பிற்றியாவத்தை வரியிலக்கம் 16 (பகுதி) ஆசுப்பத்திரி ரோட், வோட் இல. 4 | மா, தென்னை, கமுகு, முதலிய மரங்களடங்கிய தோட்டம் | கண்டி நாட தேவாலய பரிபாலகர் | 0 0 6·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5ம் பிரிவின் (203ம் அதிகாரம்) ஏற்பாடுகளின்பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சஞதிகார மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக் ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்னபதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவ்ரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஹூ (ஜனவரி) தை மாதம் 30 ந் தேதியிலன்று காலே 10 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1939 ம் ஹூ (டிசெம்பர்) மார்கழிமீ 16 ந் உ.

பீ. எம். ரெனிசன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

நவ்யாத்தென்னே நெசவுப் பாடசாலே என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல.: A 601. குறிச்சி—நவயாலத்தென்னே (கடை).

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | நவயாலதென்னஹேன | கமுகு பலா அடங்கிய தோட்டமும் ஓடுபோட்ட கல்லால் கட்டின நெசவுப் பாடசாலேயும். | கௌரவ ஏ. றற்றுயக்க, அரசாங்க சபை அங்கத்தவர், ககல்லா, கட்டுகாஸ்தோட்டை | 0 0 12·75 |

எடுத்துக்கொள்தவற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் (203 ம் அதிகாரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சஞதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

**மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூல்மாய் 1940 ம் ஹூ (ஜெனவரி) தை மாசம் 30 ந் தேதியிலன்று காலே 10.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.**

கண்டிக் கச்சேரி;
1939 ம் ஹூ (டிசெம்பர்) மார்கழிமீ 16 ந் உ.

பீ. எம். ரெனிசன்.
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## காணிக் கச்சேரியைப்பற்றிய விளம்பரம்.

பேர்மிற் உத்தரவுப்பத்திரங்கள் வாங்க ஆட்களைத் தெரிந்து கொள்வதற்கான காணிக் கச்சேரியைப்பற்றிய விளம்பரம்.

(இடைவகுப்பு இலங்கையர்).

அவைகளைப்பற்றிய விவரங்கள் கீழே காட்டியுள்ள காணிகள் கேட்கும் விண்ணப்பங்களைப்பற்றி யோசிப்பதற்கும் அவைகளின் பாகங்களுக்குப் பேர்மிற் உத்தரவுப்பத்திரங்கள் வாங்க ஆட்களைத் தெரிந்துகொள்வதற்கும் 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க, காணி பண்படுத்தற் சட்டத்தின்படி 1940 ம் ஹூ மாசிமீ 8 ந் தேதியிலன்று முற்பகல் 9 மணிக்கு வவுனியா கச்சேரியில் வவுனியா உதவிக் கவண்மேந்து ஏஜன்றர் ஒரு காணிக் கச்சேரி நடத்துவாரென்று இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. பங்கீடுகள் இடை வகுப்பு இலங்கையருக்கு மாத்திரமே கிடைக்கும்.

3. எல்லா விண்ணப்பப்பத்திரங்களும் 1940 ம் ஹூ தைமீ 16 ந் தேதியில்ன்று அல்லது அத்தேதிக்குமுன் வவுனியா கச்சேரியில் உதவிக் கவண்மேந்து ஏஜன்றரிடம் வந்து சேரவேண்டும்.

4. கேட்டிருக்கும் காணியின் விஸ்தாரத்தின்படி ஏக்கர் ஒன்றுக்கு மூன்று ரூபா வீதமான வைப்புப் பணம் எல்லா விண்ணப்பப்பத்திரங்களோடுங்கூட அனுப்பப்படவேண்டும். விண்ணப்பக்காரன் ஆனவர் செய்த அல்லது செய்யாமல்விட்ட காரியம் எதினதும் நிமித்தமும் அவசியமில்லாத ஒரு நில அளவைக்கு அரசாட்சியார் பணம் செலவிட்டிருந்தால் அவ்வைப்புப்பணம் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது. குறித்த எந்த விஷயத்திலும் அவ்வைப்புப்பணம் திரும்பக் கொடுக்கப்படலாமோ அல்லவோவென்று காணிக் கொம்மிஷனர் செய்யுந் தீர்மானம் முடிவானதாயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாங்களே காணிக் கச்சேரிக்கு வரவேண்டும் அல்லது தங்கள் பிரதிநிதியாக ஒருவரை நியமித்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பக்காரன் ஆனவராவது அவருக்குப் பிரதிநிதியாக நியமித்தனுப்பப்பட்ட எவராவது காணிக் கச்சேரிக்கு வந்திராவிட்டால், விண்ணப்பக்காரன் ஆனவர் தம் விண்ணப்ப விஷயத்தில் மேலும் தொடர்ந்துசெல்ல விரும்பவில்லையென்று உதவிக் கவண்மேந்து ஏஜன்றர் அனுமானித்துக்கொள்ளலாம்.

6. இந்தக் காணிக் கச்சேரியைப்பற்றி யாதும் விசாரித்தறியவேண்டுமானுல் அக்காரியங்களைப்பற்றி உதவிக் கவண்மேந்து ஏஜன்றருக்கு எழுதி விசாரித்துக்கொள்ளவேண்டும்.

7. கீழே குறிக்கப்பட்ட காணியின் படம் நில அளவைக் கந்தோர் தலைவரிடம் செலவுகட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. எல். விக்கிறமசிங்க,
காணிக் கொம்மிஷனர்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1939 ம் ஆண்டு மார்கழிமீ 19. ந் உ.

பங்கிட்டுக்கொடுக்கவிருக்கும் காணியைப்பற்றிய விவரங்கள்.

பிரதமபடம் 4,739.

| பாகம். | கிராமம். | விசாலம் ஏறக்குறைய எவ்வளவு. | காணி என்னென்ன பயிர்கள் செய்வதற்கு ஏற்றது. |
|---|---|---|---|
| 1 ம் கண்டத்தில் பாகம் | தச்சன்குளம் வவுனியா சுகாதார சங்க எல்லைக்கு வெளியே யாழ்ப்பாணம் கண்டி ரோட்டில் 109 ம் கட்டைக்கும் 110 ம் கட்டைக்குமிடையில் | 362 ... ஏக்கர் | பழ மரங்களுக்கு பிரதானமாக தோடை எலுமிச்சை முதலியவைக்கு |